# *Latest on Andipatti*

இடை

ஆண்டிபட்டி / தேர்தல்

## The C&C Poll

in collaboration with
Visual Communication Department, Loyola College, Chennai

கருத்துக் கணிப்பு

## *as on 18th feb. morning*

## *the 'face' value of Jayalalitha and Karunanidhi*

ஜெயலலிதாவின் முகத்தைப்
பார்த்தபின்
ரஜினியைப் புறக்கணிக்கும்
வாக்காளர்கள்

*ஜெ. பிரச்சாரத்துக்கு முன்:*
ரஜினி ~ 47%, அதிமுக ~ 29.8%
*ஜெ. பிரச்சாரத்துக்குப் பின்:*
ரஜினி ~ 31%, ஜெ ~ 50.1%

கருணாநிதியின் ஒருநாள்
பிரச்சாரத்துக்குப்பின்
"கௌரவமான தோல்விக்குத்"
தயாராகும் திமுக

DMK foresees Jayalalitha would win
with a narrow margin [61.7%]

the C&C Poll
welcome for the press meet
to know the results

*Venue:* Culture and Communication
Loyola College, Chennai 600 034

*Date:* 19.02.2002 , 10.30 am

ஆண்டிபட்டி இடைத்தேர்தல்

# The C&C Poll

(ஜெயலலிதா & கருணாநிதி பிரச்சாரத்துக்குப் பின்பு)

லொயோலா கல்லூரியின் பண்பாடு–மக்கள் தொடர்பகமும் காட்சித் தகவலியல் துறையும் இணைந்து, பேரா. ச. ராஜநாயகம் தலைமையில் பதிமூன்று பேர் அடங்கிய குழு மேற்கொண்ட இரண்டாம் கட்ட (ஜெயலலிதா & கருணாநிதி பிரச்சாரத்துக்குப் பின்பு) கருத்துக் கணிப்பு 18.02.02 அன்று காலை நிறைவுற்றது. மொத்தம் 1105 பேரிடம் கருத்துச் சேகரிக்கப்பட்டது. முதல் கட்ட ஆய்வுக்குப் பின்பற்றப்பட்ட அதே அணுகுமுறையே இம் முறையும் பின்பற்றப்பட்டது. ஆய்வு மேற்கொண்ட கிராமங்களில், ஜெயலலிதா, கருணாநிதி, வைகோ ஆகிய மூவரில் குறைந்தது இருவராவது பிரச்சாரத்திற்குச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கூர்மையான தேர்தல் களம்:

ஜெயலலிதா, கருணாநிதி ஆகிய கட்சித் தலைவர்களின் நேரடிப் பிரச்சாரத்தின் விளைவாக, அதிமுக, திமுக ஆகிய இரு கட்சிகளிலும் முன்னேற்றம் தென்பட்டாலும், அதிமுகவில் அது மிகக் கணிசமான அளவிலும், திமுகவில் மிகச் சிறிதளவிலும் உள்ளது. ஜெயலலிதா–கருணாநிதியின் பிரச்சாரத்திற்குப் பிறகு, தேர்தல் களமே ஜெயலலிதா மற்றும் வைகை சேகருக்கு இடையிலான போட்டியாகப் பேரளவு கூர்மையடைந்துள்ளது.

## வெற்றி வாய்ப்பு:

வாக்காளரில் மிகப் பெரும்பாலோர் ஜெயலலிதாவுக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் (greater chance of winning) எனக் கருதுகின்றனர் (படம்–1). பிரச்சாரத்துக்கு முந்திய நிலையோடு ஒப்பிடுகையில், ஜெயலலிதாவின் பிரச்சாரம் தனக்குச் சாதகமான தோற்றத்தை உருவாக்குவதில் பெரும் வெற்றியடைந்துள்ளது (பிரச்சாரத்துக்கு முன்பு அதிமுகவுக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் எனக் கருதியோர் 68.9%).




படம்–1

வெற்றிவாய்ப்பு யாருக்கு?

ஆனால் ஓட்டு என்று வரும்பொழுது, அதிமுகவின் "வெற்றித் தோற்றம்" வாக்காளரைத் திசைதிருப்புவதாகவும் அமைந்துவிடக்கூடும். ஏனெனில், ஜெயலலிதாவிற்கே வெற்றிவாய்ப்பு அதிகம் என 81% கருதினாலும், அவருக்கு வாக்களிக்க முடிவுசெய்துள்ளோர் 56.9% மட்டுமே (படம்–2).

படம்–2

வாக்களிக்கப் போவது யாருக்கு?



பிரச்சாரத்துக்கு முந்திய நிலையோடு ஒப்பிடுகையில், ஜெயலலிதாவுக்கு வாக்களிப்போர் எண்ணிக்கை 10%-க்கு மேல் உயர்ந்துள்ளதையும் (46.7%-ல் இருந்து 56.9%-ஆக உயர்வு), வைகை சேகருடைய வாக்கு ஒரு சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளதையும் (33.4%-ல் இருந்து 34.4%-ஆக உயர்வு) காணமுடிகிறது.

கருணாநிதியின் ஒரு நாள் பிரச்சாரத்தால், ஜெயலலிதாவின் ஏறுமுக வளர்ச்சியைத் தடுக்க முடியாவிட்டாலும், திமுக வாக்காளரிடையே நிலவிய மனச்சோர்வுக்கு மருந்தாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. கருணாநிதியின் பிரச்சாரத்துக்குப் பின், திமுகவுக்கு வாக்களிப்போரில் 50% திமுகவுக்கே வெற்றிவாய்ப்பு என நம்புகின்றனர் (முன்பு 45.5%). எனினும் அதிமுகவே ஜெயிக்கும் எனக் கருதும் திமுக வாக்காளர்கள் எண்ணிக்கையில் அதிக மாற்றமில்லை (முன்பு 45.5%, இப்போது 45.1%).

### அதிமுக ஏமாறலாம்!

ஜெயலலிதாவுக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் எனக் கருதுவோரில் 21% திமுகவுக்கு வாக்களிக்க முடிவுசெய்துள்ளவர்கள், 69.9% மட்டுமே அதிமுகவுக்கு வாக்களிக்க முடிவுசெய்துள்ளவர்கள். வைகை சேகருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் எனக் கருதுவோரில் 92.5% திமுகவுக்கே வாக்களிக்க முடிவுசெய்துள்ளவர்கள். எனவே தொகுதியில் நிலவும் புறத்தோற்றத்தை மட்டுமே நம்பி, வெற்றிக் களிப்பில் மிதப்பதோ மனச்சோர்வுக்கு ஆளாவதோ சரிவுக்கான பாதையாகிவிடலாம்.

### தாழ்த்தப்பட்டோர் வாக்கு:

பிரச்சாரத்துக்கு முன்பு இருந்ததைவிடச் சற்று அதிகமாகவே தாழ்த்தப்பட்டோர் வாக்குகள் திமுக பக்கம் சாய்ந்துள்ளன (படம்-3). ஜெயலலிதாவின் பிரச்சாரத்தால் தாழ்த்தப்பட்ட இன மக்களை அதிகம் கவர இயலவில்லை (பிரச்சாரத்துக்கு முன்பு: திமுக 53.1%, அதிமுக 29.6%).




படம்-3
தாழ்த்தப்பட்டோர் வாக்கு

### சாதிரீதியாக வாக்கு:

தாழ்த்தப்பட்டோர் அல்லாத பிற இனத்தவரைப் பொருத்த மட்டில், வைகை சேகரைவிட ஜெயலலிதா மிக அதிக முன்னணியில் உள்ளார். முக்குலத்தோரில்: ஜெயா 68.8%, சேகர் 29.2%. தெலுங்கு பேசும் நாயுடு, ரெட்டி இனத்தில்: ஜெயா 56.1%, சேகர் 14.6%. கன்னடம் பேசும் கவுண்டர் இனத்தில்: ஜெயா 71%, சேகர் 22.6%. முன்பு சமமாகப் பிரிந்திருந்த பிற சாதியினருடைய வாக்குகளைக் கணிசமாகத் தன் பக்கம் திருப்பியுள்ளது ஜெயலலிதா பிரச்சாரத்தின் வெற்றியாகும்.

பிற சாதியினர் வாக்குகள்

பிரச்சாரத்துக்கு முன்

| | |
|---|---|
| அதிமுக | 36.4% |
| திமுக | 36.4% |

பிரச்சாரத்துக்குப் பின்

| | |
|---|---|
| அதிமுக | 60.4% |
| திமுக | 34% |

அனைத்துத் தரப்பினரிடையே முன்னிலை:

பிரச்சாரத்துக்கு முந்திய முதல்கட்ட ஆய்வுடன் ஒப்பிடுகையில், அனைத்துத் தரப்பினரிடையேயும் வைகை சேகரைவிட ஜெயலலிதாவுக்கு அதிக ஆதரவு பெருகியுள்ளதைக் காணமுடிகிறது. ஆண் வாக்காளரில்: ஜெயா 56%, சேகர் 33.9%. பெண்களிடையே: ஜெயா 59.2%, சேகர் 35.7%. வயது அடிப்படையில், 25க்குக் கீழ்ப்பட்ட இளம் வாக்காளர்களின் ஓட்டுக்களையும் ஜெயலலிதா தன் பக்கம் ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது (25க்குக் கீழ்: ஜெயா 50.7%, சேகர் 40.8%. இருபத்தாறு–நாற்பது: ஜெயா 60.1%, சேகர் 31.6%. நாற்பத்தொன்றுக்கு மேல்: ஜெயா 56.3%, சேகர் 34.1%).

தொழில்ரீதியாக, ஒவ்வொரு தரப்பிலும் அதிமுக 50%க்கு மேலும், திமுக 40%க்குக் கீழும் (மாத ஊதியம் பெறுவோரில் மட்டும் திமுகவுக்கு 42.5%) வாக்குகள் பெறுகின்றன.

கல்வி அடிப்படையில்,படிக்காதவர் முதல் ஆரம்பக் கல்வி வரை: அதிமுக 63.2%, திமுக 32.2%. உயர்நிலைப் பள்ளிக் கல்வி: அதிமுக 54.7%, திமுக 35.3%. கல்லூரி மற்றும் தொழில் கல்வி: அதிமுக 39.4%, திமுக 39.4%.

ரஜினிக்குச் சரிவு:

எதிர்க்கட்சிகள் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தால், ஜெயலலிதாவின் பிரச்சாரத்துக்குப் பின் அந்தப் பொது வேட்பாளர் தோல்வியையே தழுவுகிறார் (ஜெயா 56.6%, பொது வேட்பாளர் 36.9%). அவ்வாறே, ரஜினி நேரடியாக வேட்பாளராகக் களத்தில் குதித்தாலும் ரஜினிக்குத் தோல்வியே (ஜெயா 50.1%, ரஜினி 31%). ரஜினி ஆதரவுடன் ஒருவர் களத்தில் இறங்கியிருந்தால், இதைவிடப் பலத்த தோல்வியைச் சந்திக்கவேண்டியிருந்திருக்கும் (ஜெயா 52.7%, ரஜினி ஆதரவு பெற்றவர் 20.6%).

வாக்கு வித்தியாசம்:

ஜெயலலிதா வெற்றி பெறுவார் எனக் கருதுவோரில், திமுகவுக்கு வாக்களிப்போர் கருத்துப்படி: 10000க்குக் கீழ் என்போர் 61.7%. அதிமுகவுக்கு வாக்களிப்போர் கருத்துப்படி: 10000க்குக் கீழ் 20%, 10000–30000 – 24%, 30000–50000 – 13.5%, 50000க்கு மேல் 42%.

ஜெயலலிதா வெற்றி நிச்சயம் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. என்றாலும் வாக்கு வித்தியாசத்தைக் கணிப்பதில், பெரும்பாலான திமுகவினர் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் என்று கருத, பெரும்பாலான அதிமுகவினர் அதிக வித்தியாசத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த இரண்டாம் கட்ட ஆய்விலும் நமது முதற்கட்ட முடிவுகள் மிக அழுத்தமாக உறுதிசெய்யப்பட்டுள்ளன. ஜெயலலிதாவின் பிரச்சாரத்துக்குப் பெருவாரியான ஆதரவு பெருகியுள்ளது.

பேரா. ச. ராஜநாயகம் & குழு
பண்பாடு–மக்கள் தொடர்பகம் &
காட்சித் தகவலியல் துறை
லொயோலா கல்லூரி
சென்னை 600 034

19.02.02